# CONTRIBUTION OF SCHOOL EDUCATION ON STUDENT'S PERSONALITY DEVELOPMENT: COMPERATIVE STUDY FOCUSED ON SCHOOLS IN SAINTHAMARUTHU AND NEGOMBO

**S.D.M.R. Dhivyaa[1]&AWN. Naleefa[2]**
[1,2]Department of Social Sciences, Faculty of Arts and Culture,
South Eastern University of Sri Lanka.
*divyrex@gmail.com*, najeefarala@gmail.com

**ABSTRACT:** Education is the most power full weapon to change the world. Around the world every government recognized the importance of education. And they updated and develop their education system. Sri Lanka also made huge changes in education system. This new system of education should assist individuals & group's competencies relating to personal development. This is the one of the main goal in our nation education system. So this research find out Sri Lanka's education system is either contribute or not to develop student's personality growing from Sainthamaruthu and Negombo schools. A research was carried out on the heading, **"Contribution of school education in student's personality development: cooperative study focused on schools in Sainthamaruthu and Negombo".** For these study datas have been collected from primary & secondary data. Primary data have been collected these technique through observation & interview. Secondary data were collected from NIE record, GS record, student's progress report, teacher's guide book, website, magazine. According to the research findings on the comparison of both schools important aspects had been identified: Unproper learning systems, lack of resources for students and lack of students teacher interaction. There different ability students learning in a same class so, the teaching and learning methods are not flexible for everyone. Some suggestions can be proceeded in order to mitigate or prevent the mentioned issues in both Sainthamaruthu and Negombo schools. Teachers training must be held on every year, could make a friendly environment for disable students, playing based learning methods for grade three students and pasting counselors for each schools. If these suggestions would be considered in those schools, then the personalities problems among students will reduce as well as each every student can gain an equal education.

**Keywords:** Education, Personality Development

## அறிமுகம்

தனிமனிதரது வளமும் வாழ்வும் சிறப்பாக அமைதலும் நாட்டின் வளர்ச்சி சீரான முறையில் துரிதமாக நிகழ்தலும் அனைவரதும் குறிக்கோளாக காணப்படுகின்றது. இவ்விரண்டு விடயங்களின் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்பானவையாகும். தனிப்பட்ட ஒரு மனிதனின் வளர்ச்சியும் அபிவிருத்தியும் நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும். அதே போல் ஒரு நாட்டின் வளர்ச்சி தனியொருவனின் வளர்ச்சிக்கு வழிசமைக்கும். இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்ற திட்டமிடப்பட்ட வகையில் கல்வி செயன்முறை அமைய வேண்டும். இதனால் தான் ஆதி காலத்தில் இருந்தே கற்றலும் கற்பித்தலும் மனித சமூகத்தில் காணப்பட்டு வருகின்றது. மனித சமூக வளர்ச்சியுடன் கல்வி முறையும் பல மாற்றங்களை கண்டுவிட்டன.

ஆரம்ப காலங்களில் குடும்பமே பள்ளியாகவும் பெற்றோர்கள் ஆசிரியர்களாகவும் இருந்த நிலை மாறி கல்வி கற்க முறைசார்ந்த வழிமுறையாக பாடசாலைகளும் கற்பித்தலுக்கு ஆசிரியர்களும் உருவாகின. குடும்பத்தில் இருந்து கல்வி செயன்முறை பாடசாலைகளுக்கு மாற்றம் பெற்றதனை கல்வி வரலாற்றின் முதல் புரட்சி என எரிக் ஆஸ்டி என்ற கல்வி வல்லுநர் குறிப்பிடுகின்றனர்(சந்தானம்.எஸ்> 1993).

கல்வி என்பது எதனை குறிப்பிடுகின்றது என்பதனை நோக்குமிடத்து அதன் உட்பொருள் வளர்த்தல் என்பதாகும். ஒரு குழந்தையின் ஆளுமை ஆளுமையை வெளிக் கொணர்தலே கல்வியின் அடிப்படை அலகாக காணப்படுகின்றது. கல்வியினை கற்பதன் ஊடாக பல நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அறிவினை பெறுதல் என்பது அடிப்படை நோக்கமாக காணப்பட்ட போதிலும் தொழில் பெறுதல்> பணம் ஈட்டுதல்> சமூக அந்தஸ்தை பெற்றுக் கொள்ளுதல் போன்ற மறைமுகமான நோக்கங்களும் உள்ளடங்குகின்றன. இவற்றுடன் கல்வியின் உள்ளார்ந்த நோக்கமாக காணப்படுவது தனித்தன்மை

நோக்கமாகும் (சந்தானம்.எஸ்>1993). இதுவே கல்வியலாளர்களின் கருத்துமாகும். அதாவது தனிப்பட்ட ஆளுமையை வளர்ச்சி பெற உதவுவதே கல்வியின் இறுதி நோக்கமாக காணப்பட வேண்டும்.

பாடசாலை கல்வித் திட்டங்கள் வகுக்கப்படும் போது ஆளுமை குறித்த விடயங்களும் கல்வி அமைச்சினால் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. ஒரு பிள்ளை குறிப்பிட்ட வயதில் எத்தகைய விடயங்களை உள்வாங்க கூடிய மூளை வளர்ச்சியினை கொண்டிருக்குமோ அதற்கேற்ப தான் பாடத்திட்டம் வழங்கப்படுவதுடன் அவ் வயதுக்குரிய ஆளுமையை விருத்தியினை ஏற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தான் அக் கல்வித் திட்டமும் வடிவமைக்கப்பட்டிருக்கும். நவீன கல்வியுலகில் ஜீன் பியாஜே எனும் கல்வி உளவியலாளரின் கருத்துக்களே பெரும்பான்மையாக செல்வாக்கு செலுத்துகின்றதை அவதானிக்கலாம்.ஜீன் பியாஜே பிள்ளைகள் ஒவ்வொரு வயது பரப்பிலும் பொருட்டே அக் குழந்தை தன்னை சூழவுள்ள உலகினை புரிந்து கொள்வதற்கான இயலுமை> அபிவிருத்தி அமையும் என கூறுகின்றார். இதனையே கல்வித் திட்டங்களும் அடிப்படையாக கொண்டுள்ளன(சந்திரசேகரன்.எஸ் 2011).

இலங்கையிலும் கல்வி பாடத்திட்டங்கள் மாணவர்களின் வயது மற்றும் ஆளுமை என்பவற்றை கருத்திற் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் சிறந்த ஆளுமையுடையவர்களாவோ திறமை வாய்ந்தவர்களாகவோ> தனித்து நின்று செயலாற்ற கூடியவர்களாகவோ தமக்குரிய சமூக கடமைகளை உணர்ந்தவர்களாகவோ இல்லை.

ஆளுமை விருத்தியில் பாடசாலை கல்வி முழுமையான ஏற்பாட்டுடன் வழங்கப்பட்ட போதும் அடையப்பட வேண்டிய தேர்ச்சியை ஒவ்வொரு மாணவனிலும் முழுமையாக அடையப்படாமல் இருப்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய கல்வியியல் ரீதியான சமூக பிரச்சினையாகவே உள்ளது

பாடசாலை கல்வியின் பங்களிப்பு ஆளுமையை வளர்ப்பதில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதினை வெளிக்கொணர " மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பாடசாலை கல்வியின் பங்களிப்பு" என்றதன் அடிப்படையில் நீர்கொழும்பு மற்றும் கல்முனை கல்வி வலயங்களிற்குட்பட்ட இரு பாடசாலைகளில் ஒப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது ஒப்பீட்டாய்வாக அமைவதனால் இரு பாடசாலைகளில் தகவல் சேகரிப்பு இடம்பெற்றுள்ளது. சமூக விஞ்ஞான ஆய்வாக அமைகின்ற காரணத்தால் பண்பு மற்றும் அளவுசார் ஆய்வு முறைகள் ஊடாக இவ் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. நீர்கொழும்பு மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்தின் இரு பாடசாலைகள் நோக்க அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது. இவ்விரு பாடசாலைகளிலும் உள்ள அதிபர் ஆசிரியரகள் மாணவர்கள் ஆய்வுக்குரிய குடித்தொகைகளாக அமைகின்றனர். அவர்களுள் பிரதான மாதிரிகளாக மாணவர்களே காணப்பட்டனர். அவர்களுள் நோக்க மாதிரி அடிப்படையில் தரம் மூன்று ஆய்வுக்குரிய மாதிரியாக ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டனர்.

***1. அவதானிக்கப்பட்ட மாதிரிகளின் விபரம் - நீர்கொழும்பு இந்து மத்திய கல்லூரி***

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 3A | 17 | 14 | 31 |
| 3B | 16 | 13 | 29 |
| 3C | 23 | 11 | 34 |
| 3D | 19 | 13 | 32 |
| **மொத்தம்** | 75 | 51 | 126 |

***2. அவதானிக்கப்பட்ட மாதிரிகளின் விபரம் - சாய்ந்தமருது அல்'லோல் மகா வித்தியாலயம்***

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 3A | 23 | 18 | 41 |
| 3B | 21 | 22 | 43 |
| 3C | 28 | 21 | 49 |
| 3D | 21 | 20 | 41 |
| மொத்தம் | 93 | 81 | 174 |

(கள ஆய்வின் ஊடாக பெறப்பட்ட தகவல்கள்-2016)

மேற்படி ஆய்வில் முதலாம் நிலைத் தரவுகள் அவதானம்> நேர்காணல் முறை மூலம் தகவல் சேகரிப்பு நுட்பங்களாக பயன்படுத்தப்பட்டது. தரம் மூன்று மாணவர்கள் அடிப்படையாக கொண்டு அவதானம் மேற்கொள்ளப்பட்டதுடன் தரம் மூன்று வகுப்பாசிரியர்கள், பிரிவுத்தலைவர்கள், அதிபர்களை தகவலாளிகளாக கொண்டு நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத் தகவல்களான பாடசாலைகளின் அறிக்கை>புள்ளிவிபரங்கள்> மாணவர் பற்றிய குறிப்புக்கள்> அடைவுமட்டங்கள், தேர்ச்சி அறிக்கைகள் மற்றும் இலங்கை கல்வித் திட்டம் தொடர்பான தகவல்கள் தேசிய கல்வியல் நிறுவனம் குறித்த விடயங்கள் புத்தகங்கள்> வெளியீடுகள்> இணையத் தகவல்களூடாக பெறப்பட்டு ஆய்வானது முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது.

### 3. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

ஆளுமை விருத்தியின் அடிப்படை வயது மட்டத்தினை பிரதானமாக கருத்திற் கொண்டு ஆரம்பக் கல்வி மாணவர்களில் மூன்றாந் தர மாணணவர்கள் மீதான அவதானம் இவ் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாணவர்களுடன் பாடசாலை சூழலில் நேரடியான இடைவினை கொண்டிருப்பது ஆசிரியர்களே ஆவார்கள். எனவே மாணவர்கள் பற்றிய தரவுகளை பெற்றுக் கொள்ளவும், பாடசாலை மற்றும் வகுப்பறை சூழல் பற்றிய தரவுகளினை பெற்றுக் கொள்ளவும் ஆசிரியர் மற்றும் பிரிவுத்தலைவர் மற்றும் பாடசாலை அதிபரையும் பிரதான தகவலாளிகளாக கொண்டு நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டது.மேற்கூறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளுடன் மாணவர்களின் கற்றல் தேர்ச்சி அறிக்கை, ஆசிரியர் மாணவ குறிப்பு அறிக்கை, ஆசிரியர் கையெடு, மூன்றாந் தர பாடப்பரப்பு என்பவற்றை இரண்டாம் நிலைத்தரவுகளாக சேகரிக்கப்பட்டு முழுமையாக பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு ஒப்பீட்டு கலந்துரையாடப்பட்டுள்ளது.

**விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி மற்றும் சாய்ந்தமருது அல்'லால் வித்தியாலத்தின் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலான ஒப்பீடு**

இலங்கையின் ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பின் புதியதாக உள்வாங்கப்பட்ட விடயத்தின் பிரகாரம், ஆரம்பக்கல்வி மாணவர்களின் தேர்ச்சியினை பூரணப்படுத்துவதாகும். உள்வாங்கப்பட்ட ஐந்து தேர்ச்சிகளில், ஒவ்வொரு மாணவனினதும் ஆளுமை தேர்ச்சியும் ஒன்றாகும். இத் தேர்ச்சியினை மையப்படுத்தியே பாடத்திட்டங்கள், வள ஏற்பாடுகள், கற்றல் முறைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. எதிர் பார்க்கப்படும் தேர்ச்சி முழுமையாக அடையப்படாததன் காரணங்களை இரு பாடசாரைகளில் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டுள்ளது.

கற்றலின் செயற்பாட்டில் சூழலின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகின்றது. இச் சூழல் ஆளுமை விருத்தியல் செல்வாக்கு செலுத்துகின்றது. கற்றல் சூழல் சுகாதாரமாகவும், சிநேக பூர்வமாகவும் மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியில் அமைந்திருப்பது அவசியமாகும். ஏனெனில் நடத்தை மாற்றத்தில் புறக் காரணிகள் தொடர்புபடுகின்றன. ஒரு சீரான நடத்தை மாற்றத்தை மாணவனிடத்தில் நாம் எதிர்பார்க்கின்றோம் எனில் சரியான புறக்காரணியை இனங்காணப்பட்டு அதனை வழங்குவதன் ஊடாக இலக்கினை அடையளாம்.ஆகவே ஆரம்பக் கல்வி மாணவர்களினுடைய கற்றல் சூழல்

நெருக்கீடற்றதாக, குறைந்தது 1.3 சதுரஅடி இடைவெளி ஒவ்வொரு மாணவனுக்கும் இடையில் காணப்பட வேண்டும்.

விஜரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் மாணவர்களின் வகுப்பறையானது இடநெருக்கீடற்றதாகவும் மாணவர்களின் மேசை கதிரகளுக்கிடையில் ஒரு இடைவெளி காணப்பட்டது. ஆனால் இத்தகைய இடவசதி அல்ிலால் வித்தியாலத்தில் இல்லை. குறைந்தது 35 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்பதால் இந்நிலைமை காணப்படுகின்றது.

இரு பாடசாலைகளிலும் ஐந்து அடிப்படை தேர்ச்சிகளினதும் விருத்தியினை மாணவர்களின் கண்டறிவதற்கு ஐம்பத்திரெண்டு பயிற்சிகளை கொண்டு இத் தேர்ச்சியின் பூர்த்தி நிலை கணிப்பிடப்படுகின்றது. ஐம்பத்திரெண்டு பயிற்சிகளிற்கும் ஒவ்வொரு விருத்தி நிலையும் கணிக்கப்படுகின்றது. ஒரு பயிற்சி ஒரு மாணவானல் ஒரு தடவை மட்டுமே செய்யப்படுகின்றது.அப்பயிற்சியை மாணவன் எவ்வாறு அச்சந்தர்ப்பத்தில் செய்கின்றானோ அதனை மாத்திரம் கொண்டே தேர்ச்சி பூர்த்தியினை மாணவன் அடைந்துள்ளார் இல்லையா என்பது தேர்ச்சி அறிக்கையில் அடையாளமிடப்படுகின்றது. குறிப்பிட்ட பயிற்சி மீண்டும் மாணவனுக்கு வழங்கப்பட்டால் தான் பயிற்சி எனும் தூண்டல் வலுப்பெற்று நாம் எதிர்பார்க்கும் ஆளுமை எனும் துலங்களை நிலையாக பெறலாம். இதனையே மீள்வலியுறுத்தல் கொள்கை வலியுறுத்துகின்றது. இரு பாடசாலைகளிலும் கல்வித்திட்டப்படி தேர்ச்சி அறிக்கை பூர்த்தி செய்வதற்கு மாத்திரமே பயிற்சிகள் வழங்கப்படுகின்றதே ஒழிய அவை மீண்டும் வலியுறுத்தப்படுவதில்லை.

ஒரு வகுப்பில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் ஒரே வகையினராக காணப்படுவதில்லை. மீற்றிறன் உடைய பிள்ளைகளுடன் கற்றல் இயாலாமை உடையோரும், விசேட தேவையுடையோரும் காணப்படுகின்றனர். விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் இவ்விரு மாணர்களும் மூன்றாந் தரத்தில் கல்வி கற்கின்றமையும் அல்ிலால் வித்தியாலத்தில் கற்றல் இயலாமை உடையோர் கற்கின்றமையும் ஆசிரியரின் ஊடாக அறியமுடிந்தது. இவ்விரு பாடசாலைகளிலும் இத்தகைய இயல்புடைய மாணவர்களுக்கான வள பற்றாக்குறை காணப்படுகின்றது. குறிப்பாக அவர்களுக்கான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களுமில்லை, அவர்களுக்குரிய சாதனங்களோ, விசேட தேவையுடையோருக்கு சிநேகபூர்வமாக அவர்களும் இயங்க கூடிய சூழல் அமைக்கப்படவில்லை. குறிப்பாக விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் இச் சூழ்நிலை காணப்படுகின்றது. விசேட தேவையுடையோருக்கான வள ஏற்பாடு அங்கில்லை. அல்ிலால் வித்தியாலத்தில் விசேட தேவையுடையோர் இல்லாத காரணத்தால் இப்பிரச்சினை எழவில்லை. கற்றலுக்கான பயிற்சி மாணவர்களின் தன்மையினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒவ்வொரு மாணவனுக்கும் கல்விசார் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேறாத தேவைகள் ஆளுமை வளர்ச்சிக்கு குறைந்தளவு சந்தர்ப்பத்தையே வழங்கும் என மனதித்ததுவ தேவை கொள்கைள் எடுத்தியம்புகின்றது. மேலும் மேற்குறிப்பிட்ட விசேட தேவையும் கவனிப்பும் உடைய மாணவர்கள் ஏனைய மாணவர்களை போல குறிப்பாக ஏற்றுக்கொள்ளல் தேவையுடையோராவர்கள்.குடும்பத்திற்கடுத்து அடுத்து மாணவர் உள்வாங்கப்படும் பாடசாலை சூழலில் இம்மாணவர்களை சக மாணவர்கள் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளாதவிடத்து ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுனையாக அமையும் தன்னம்பிக்கை இழக்கப்படுவதுடன் குறுகிய சுய எண்ணக்கருவுடைய மாணவர்களாக இவர்கள் உருவாகுகின்றனர்.

பாடசாலை கல்வித்திட்டத்தில் மாணவர்களின் இடைவினையை அதிகரிப்பதற்காக வாரம் ஒருமுறை ஆரம்பக் கல்வி மாணவர்களை தரம் ஆறு மாணவர்களுடன் பழகுவதற்கான சந்தர்பத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என கூறுகின்றது. இவ்விடம் தொடர்பாக இரு பாடசாலையினதும் தரம் மூன்று வகுப்பாசிரியர்களிடம் வினாவிய போது இச்செயன்முறை பின்பற்றப்படுவதில்லை என பதிலளிக்கப்பட்டது.இக்காலக்கட்டத்தில் தான் பிள்ளை ஒவ்வொருவரையும் தீவிரமாக அவதானிக்கும். இதன்போது பாடசாலை சூழலில் அதிகமாக பிள்ளைகள் நேரத்தினை செலுத்துவதால், ஆசிரியர்கள் சக மாணவர்களை பற்றிய அவதானம் அதிகமாக காணப்படும். அவர்கள் இடைவினை கொள்ளும் வட்டம் விரிவடைந்தால் அவர்களுடைய சிந்தனை பரப்பும் விரிவடைவதோடு நிலையானதும் சரியானதும் சுயம் உருவாக்கப்படும். கல்வித்திட்டத்தில் அதற்கான ஏற்பாடு காணப்பட்ட போதும் அதற்கான செயன்முறைகள் ஆய்வின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட இரு பாடசாலையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அறிய முடிந்தது.

ஆசிரிய மாணவ இடைவினை சிறப்பாக அமைந்தால் தான் கற்றல் முறைகளை இலகுவாக மேற்கொள்ள முடியும். இதன்பொருட்டு ஆரம்பக்கல்வியில் முதலாம் நிலையில் இரு வகுப்பிற்கும் ஒரு ஆசிரியரும், இரண்டாம் நிலையின் இரு வகுப்பிற்கும் ஓரு ஆசரியரும், இறுதி மூன்றாம் நிலையில் ஒரு ஆசிரியரும் வகுப்பாசிரியராக இருக்க வேண்டும். ஆனால் இம் முறையை விஜயரத்தினம் இந்து

மத்திய கல்லூரியில் பின்பற்றுவதில்லைை. இதனை ஒரு குறைப்பாடகவே தரம் மூன்று ஆசிரியர் திருமதி பாரதி அவர்கள் குறிப்பிட்டார்.

மீண்டும் தரம் நான்கினை புதிய ஆசிரியரிடம் கையளிப்பதனால் ஆசிரிய மாணவ இடைவினை தடையுறுகின்றது. மாணவர் ஆசிரியரிடையே இடைவெளி நிலவுகின்றது. தரம் மூன்றில் மாணவ இனங்காணல் ஒரு வாரத்திற்கு இடம் பெறுவதன் காரணம் இடைவினை சிறப்பானதாக அமைவதற்காகும். ஆனால் சாய்ந்தமருது அல்`pலால் வித்தியாலத்தில் இம்முறை நடைமுறையில் உள்ளது என ஆரம்பக்கல்வி பிரிவுத்தலைவர் திருமதி நவீத் அவர்கள் நேர்காணலில் தெரிவித்தார்.

இரு பாடசாலைகளிலும் வகுப்பறை அவதானத்தில் இனங்காணப்பட்ட முக்கியமான விடயம் யாதெனில் ஒரு விடயத்தை ஆசிரியர் கூறியவுடன் மாணவர்கள் அதனை உடனே புரிந்து கொள்ள வேண்டும் என ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றனர். பிள்ளைகள் ஒரு விடயம் சார்ந்த அறிவினை முதல் கட்டத்திலே பெறமாட்டார்கள். முயன்று தவறி, அவ் அனுபவத்தின் ஊடாகவே அறிகையினை பெறுவார்கள். ஒரு பாடத்தை கற்ற உடன் பிள்ளை அவ்விடயம் சார்ந்த முழுமையான அறிவினை பெற வேண்டும் எண்ணும் ஆசிரியர்களின் போக்கு மாணவர்களிடையேயும் நிலவுகின்றது. பாடம் தொடர்பான எவ்வித சந்தேகங்களையும் பிள்ளைகள் கேட்பதில்லை. புத்தகத்தில் காணப்படும் பயிற்சியினை எவ்வாறு செய்ய வேண்டும் என ஆசரியர் கூறிய போது அதனை விளங்கிக் கொள்ள முடியாத பிள்ளைகள் தனக்கு பக்கத்திலிருக்கும் பிள்ளையின் பயிற்சி புத்தகத்தை பார்த்து செய்து ஆசிரியரிடம் காட்டி அவ்விடயத்தை நிறைவு செய்கின்றனர்.

மாணவர்களின் வினா எழுப்பும் ஆளுமை முளையிலே தடைப்படுகிறது. வினா எழுப்புவது தவறு என்ற எண்ணப்பாங்கு இயல்பாகவே மாணவர்களின் மனதில் குடிகொள்வதுடன், முன்வருதலுக்குரிய தைரியமும் மாணவர்களுக்கு விருத்தி செய்யப்படுவதில்லை.மற்றும் மாணவர்களினை வகுப்பறையில் குழுவாகவே அமர வேண்டும் என இலங்கை கல்வித்திட்ட ஏற்பாடு வலியுறுத்துகின்றது. இரு பாடசாலைகளிலும் வகுப்பறையில் மாணவர்கள் இரண்டு மேசையில் நான்கு மாணவர்கள் என அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனூடாகவே மாணவர்களுடைய உள்ளார்ந்த விருத்தி மட்டம் வளர்ச்சியடையும் என விகொஸ்கியின் அறிகை உளவியல் கொள்கை கூறுகின்றது. ஆசிரியர்களால் வழங்கப்படும் செயற்பாடுகளை குழுவாக செயற்படுவதன் ஊடாக மாணவர்களிடையே சிந்தனை பல்வேறு வழிகளில் ஆக்கப்பூர்வமாக வளர்ச்சியடைவதுடன் இன்னொருவரை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் வளர்ச்சியடைகின்றது.

மாணவர்களின் மொழியாற்றல் இயன்றியமையாதது ஆகும். மாணவர்களின் மொழியாற்றலின் அடைவுமட்டம் தொடர்பாக விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி மூன்றாந்தர வகுப்பாசிரியர்களிடம் வினவியபோது மொழியாற்றல் மாணவர்களிடையே வயதுக்குரிய மட்டத்தில் காணப்படுகின்றது. இருப்பினும் தரம் மூன்றிற்கு சித்தியடைந்திருப்பினும் இன்னும் தாய் மொழியில் எழுத்தை இனங்காண முடியாத பிள்ளைகள் 10% காணப்படுவதாக கூறினர். இதற்கான காரணம் ஆரம்பக் கல்வியில் முதலாம் நிலையில் எழுத்துக்கள் தொடர்பான அறிவும் பயிற்சியும் முழுமையாக வழங்காமையாகும். நேர்காணலில் இது தொடர்பான வினாவினை சாய்ந்தமருது அல்`pலால் வித்தியாலத்தின் மூன்றாந்தர ஆசிரியர்களிடம் முன்வைத்தபோது, தம்மிடம் கற்கும் மாணவர்கள் எழுத்தை இனங்காண்பதிலோ, மொழியாற்றலிலோ சிக்கல்களை எதிர்நோக்குவதில்லை என குறிப்பிட்டனர்.

ஆரம்பக் கல்வியில் தரம் மூன்றில் மேசை செயற்பாடுகள், செயற்பாடு, விளையாட்டு என்பன சம அளவில் காணப்பட வேண்டும். மூன்றாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்பிக்கப்படும் பிரதான பாடங்களானஇம் மூன்று முறைகளிலுமே மேற்கொள்ளப்பட வேண்டும். விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் சுற்றாடல் பாடங்களில் விளையாட்டுடன் கூடிய மைதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. சாய்ந்தமருது அல்'லால் வித்தியாலத்தில் மைதானத்தில் இடப்பரப்பளவு பற்றாக்குறையினால் மைதானம் சார்ந்த வழிப்படுத்திய விளையாட்டுக்கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி பாசறைகள் மிக அரிதாகவே நடைபெறுவதாக நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் அதிபர் திரு புவனேஸ்வராஜா நேர்காணலின் போது தெரிவித்தார். சாய்ந்தமருது அல்'லால் வித்தியாலத்தில் ஆசிரியர் பயிற்சி பாசறைகள் தொடர்ந்து இடம் பெறுவதாக அதிபர் எம்.எஸ்.எம். பைசல் நேர்காணலில் தெரிவித்தார். பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஏற்படும் தடைகள் சிக்கல்களுக்கு வெற்றிகரமான தீர்வினை அணுகும் பொருட்டு உளவளத்துணைசரர் புலமை வாய்ந்த ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் பணடயாற்றுவதன் தேவை உணர்ந்து அதனை இலங்கை பாடசாலைகள் அவ்வாறு ஒரு ஆசிரியரை

நியமிக்கின்றனர். ஆனால் இவ்விரு பாடசாலைகளிலும் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் இல்லை என்பது நேர்காணலினூடாக அறிய முடிந்தது.

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி பூர்த்திகள் அறிக்கையை ஒப்பிட்ட போது வருட இறுதியில் இரு பாடசாலைகளிலும் மாணவர்களின் தேரச்சி அறிக்கையில் அனைவரும் தேர்ச்சி மட்டத்தை அடைந்துள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வருட இறுதியில் பரீட்சை முடிவுகளை ஆராயும் போது அனைவரும் அதிகூடிய புள்ளிகளை பெறவில்லை. மாணவர்களிடையே புள்ளிகள் இடையிலான வேறுபாடு நிலவுகின்றது. ஆனால் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளில் பூரணமடைந்துள்ளனர். கற்றல் தேர்ச்சிகளில் முழுமையான அடைவுமட்டத்தை அடையும் இயல்பு மாணவருக்கு காணப்பட்டால், பரீட்சையிலும் அதிக புள்ளிகளை அடையும் நிலை காணப்பட வேண்டும். இவையிரண்டுக்கும் முரணான நிலை காணப்படுகின்றது.

## 4.முடிவு

இலங்கை கல்வி திட்டம் அனைவருக்கும் கல்வி எனும் உலகளாவிய கொள்கையினை உள்வாங்கியுள்ளது. கல்வித்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களை உற்று நோக்கும் போது அனைத்து இலக்குகளும் சிறந்த ஆளுமையுடைய நற்பிரஜையை உருவாக்குவதனையே மையப்படுத்தியுள்ளன. குறிப்பாக கல்வியினூடாக பூரணமான ஆளுமைத்தன்மையுடைய, தர்க்க சிந்தனையுடைய, புத்தாக்கமான எண்ணமுடைய ஒவ்வொரு மாணவரை உருவாக்க வேண்டும் என்ற இலக்கினையும் கொண்டுள்ளது. பண்டைய உலகக் கல்வி வரலாற்றை நோக்கும் பிரசித்திப்பெற்ற கிரேக்கம் மற்றும் ரோமானிய கால கல்வி முறைகளும் ஆளுமை விருத்திக்கு முக்கியத்துவமளிக்கின்றன.

ஒரு இலக்கினை வடிவமைக்கும் போது, குறித்த இலக்கினை வெற்றிகரமாக அடைய வேண்டுமாயின் வலுவான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இலங்கை கல்வித்திட்டமும் சிறந்த ஏற்பாட்டினை கொண்டமைந்துள்ளது. எழுத்தறிவு மட்டத்தினை 100% அடைந்தள்ளது என இலங்கையினை குறிப்பிட்டு கூறினாலும், கல்வியினூடாக ஏன் ஆளுமையுடைய நற்பிரஜைளாக அனைவரையும் உருவாக்க முடிவதில்லை என்பது கேள்விக்குரியாகவே உள்ளது. சிறு வயது குற்றங்களே இன்று இலங்கையில் அதிகரித்த வண்ணமுள்ளன.

தலைமைத்துவம் அனைவரிலும் எதிர்பார்க்க முடிவதில்லை. ஒரு பகுதியினோர் போதை, களவு, முரண்பாடு, கடத்தல் என எதிர்மறையான வாழ்க்கை பாதையில் தம்மை ஈடுபடுத்தி கொள்கின்றனர். குறித்த வயதில் கல்வி வழங்கப்பட்ட போதும் இந்நிலைமை தொடர்கின்றது. படித்த மாணவர்கள் ஒழுங்கு முறைக்கு எதிராகவும் சமூகம் ஏற்றுக் கொண்ட விழுமியங்களுக்கு எதிராகவும் சமூகத்தில் செயற்படுகின்றனர். உற்பத்தி மையங்களிலும் உயர் நிலைகளிலும் பிரகாசிக்க ளவேண்டிய இளம் வயதினர் சிறைச்சாலைகளிலும் மனநல மருத்துவமனைகளிலும் வாழ்கின்றனர். உள ஆரோக்கியமின்மையான நிலை இளம் சமூகத்தினரிடையே நிலவுகின்றது. உளமானது நேரடியாக மனித நடத்தையுடன் தொடர்புபட்டதாகும். உள ஆரோக்கியம் சுமுகமான வாழ்க்கையின் அடித்தளமாகும்.இதனடிப்படையில் கல்வி முறைகளிற்கு அமைய கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், கல்வியின் நோக்கமான ஆளுமை விருத்தி அனைவரும் அடையப்படாமல் போவதற்கான காரணத்தை இரு பாடசாலைகளை ஒப்பீட்டு கண்டறிவதை பிரதான நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது கம்ப`ா மாவட்டத்தின் நீர்கொழும்பு கல்வி வலயத்தில் விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியினையும், அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கல்வி வலயத்தில் சாய்ந்தமருது அல்ிலால் வித்தியாலத்தையும் ஆய்வு பிரதேசமாக தெரிவு செய்யப்ட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வு செய்ப்பட்ட இரு பாடசாலைகள் ஊடாகவும் ஆளுமை விருத்தி எனும் இலக்கினை அடையப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டன. அவையாவன கல்வி திட்ட நடவடிக்கைகளை முறையாக பின்பற்றாமை, ஆசிரிய மாணவ இடைவினையில்லை, வெவ்வேறு கற்றல் இயல்பு கொண்ட மாணவர்களுக்கு ஒரே வகையான கற்றல் முறைமையினை போன்ற பிரதானமான காரணிகளே இந்நிலைமைக்கு காரணமாகியுள்ளன. கல்விதிட்டம் முறையான ஒழுங்கமைப்பில் காணப்பட்ட போதும் அதனை பிரயோகப்படுத்தும் போது சரியான வடிவில் மாணவ சமூதாயத்திடம் கொண்டு செல்லப்படுவதில்லை. மாறாக குறித்த பகுதியினர் மாத்திரமே அதன் நன்மையை சுவீகரிக்கின்றனர். ஏனைய பகுதியினருக்கு பிரயோகிக்கப்படும் முறை ஏற்றதாய் அமையாத காரணத்தால் கல்வியில் பின்வாங்குவதுடன் கல்வினூடான ஆளுமை விருத்தியை அடைய முடியாதுள்ளது.

கற்றல் முறைமை மாணவர்களின் இயல்பை, உள நிலையை, இயலுமையை கருத்திற் கொள்ளப்படாமல் கற்பிக்கப்படுவதனால் இச்சிக்கல் நிலைமை ஏற்படுகின்றது. மற்றும் சமூகம் கல்வியினை பொருளாதார முதலீடாகவே நோக்குகின்றனர் தவிர அதனால் பூரணமான மனிதன் உருவாகின்றான் என்பதை கருத்திற் கொள்ளவில்லை. ஏதாவது ஒரு முறையில் பரீட்சையில் சித்தி பெறுவது மாத்திரமே ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் தலையாய கடமையாக உள்ளது. ஒரு விடயம் ஒரு பாடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது எனின் அதன் நோக்கம் அடையப்படாமல் முழுமையாக விளங்கிக் கொள்ளாமல் பரீட்சையினை மாத்திரம கருத்திற் கொண்டு கற்கின்றனர். கிடைக்கப்பெறும் வளங்கள், கற்றல் சூழல் ஆகிய காரணிகளில் இரு பாடசாலைகளில் வேறுப்பட்டதாக காணப்பட்ட போதும். ஏனைய காரணிகள் ஒப்பீட்டளவில் பொதுவாகவே காணப்படுகின்றன.

உலகில் தலை சிறந்து விளங்கும் பின்லாந்து கல்வி முறையிலும் 13 வயது வரை பாடசாலையில் புள்ளிகளின் அடிப்படையில் மாணவ நிலை பிரிக்கும் முறையில்லை. ஓவியம், இசை ஆகியவற்றிற்கே ஆரம்பக்கல்வியில் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இவையனைத்தும் மாணவர்களின் உளநிலையை கருத்திற் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே கல்வித்திட்டங்களில் மாத்திரமல்லாது கற்பிக்கப்படும் முறைகளிலும் உளவில் தொடர்பாக அதிகளவு கவனத்திற் கொள்ளாமையும் மாணவர்கள் விசேட தேவையுடையோரா, கற்றல் ஒழுங்கீனம் உடையோரா, மீற்றின் அற்றவர்களா, மெல்ல கற்போரா என்பதை இனங்கண்டு அவர்களுக்கும் ஏற்ற வகையில் கற்பிக்கப்படாமையே முழுமையான ஆளுமையுடைய இளம் சமுதாயத்தை உருவாக்குவதில் தடையாக அமைகின்றது. இறுதி வெளியீடாக உளபாதிப்பு, வாழ்வில் நம்பிக்கையற்ற தன்மை, கற்றலில் பின்வாங்கல் என்பன ஏற்பட தூண்டு கோளாய் அமைகின்றது.

மாணவர்கள் ஆரம்ப கல்வியினை பெறும் பருவத்திலே தமது அடையாளம் பற்றி, தமது சுயம் பற்றி, ஆரோக்கிமான முன்னேற்றகரமான விம்பங்களை உருவாக்கப்பட வேண்டும். சிறந்த ஆற்றல்களும் மனப்பாங்குகளும் உருவாக்கி கொள்வதற்கு உரித்தப் பருவமாகும். இவ்விடயத்தில் கல்வி தாபனங்களும், கல்வி முறைகளும் அக்கறை கொள்ளப்பட வேண்டும். இவ்வயது பருத்தில் அவர்களின் உளம் கண்ணாடிக்கு ஒத்ததாகும். ஒரு சிறு கீரலையும் எவ்வாறு கண்ணாடியில் அழிக்க முடியாதோ அதே போல் இப்பருவத்தில் ஏற்படும் உள பதிவுகளை எப்பொழுதும் மாற்ற முடியாது.

ஒரு சிறு தடங்கலும் பிற்காலத்தில் ஆளுமை பிறழ்லாக வெளிப்படும். தலைமைத்துவம், சகிப்பு தன்மை, குழுவாக பணியாற்றல், சுயமாக முடிவெடுத்தல், பரீட்சையில் சித்தி, உணர்வு, மதிப்பளித்தில் ஆகிய பல பண்புகள் எதிர்மறைத்தன்மையினையே ஆளுமை பிறழ்வால் ஏற்படுகின்றன. இவை போன்ற காரணங்களே இளம் சமூகத்தினர் மது, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாதல், குற்றங்கள் புரிதல், வாழ்வில் விரக்தி, அந்நியமயமாக்கம் போன்ற பாரதூரமான விளைவுகள் ஏற்பட காரணமாக உள்ளன.

இவ்வாய்வானது அதற்கான காரணங்களையே பிரதானமாக மையப்படுத்தி மேற் கொண்டுள்ளது. அதாவது பாடசாலை கல்வியின் ஒரு இலக்கான ஆளுமை விருத்தி பூரணமாக எய்தமால் இருப்பதற்கான நிலையினை ஆராய்ந்து முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கான வளங்கள், கல்வி திட்டங்கள் வழங்கப்படுகின்ற போதும் இவ்வாறான நிலை காணப்படுவது எதிர்கால சந்ததியினருக்கு பாதிப்பாக அமைகின்றது. நாட்டின் அபிவிருத்திக்கும் தடையாக அமையும். குறிப்பிட்ட இலக்குகள் ஏன் அடையப்படாமல் உள்ளன என்பது தொடர்பான இக் காரணிகள் பற்றிய ஆய்வு இலங்கை கல்வியமைப்பிற்கு அவசியமான ஒன்றாகும். கல்வி இலக்குகள் அடையப்படுகின்றதா? இல்லையா தொடர்பான மதிப்பீடுகளுக்கு இவை இன்றிமையாததாகும்.

## 5. உசாத்துணை


Noorjehan, N., Polcepatil, B.B. (2013). TAGORE'S Philosophy of Education- Its relvence to contemporary education.Global vision publishing house. New Delhi

Ministry of Education. (2013). Sri Lanka Education Information. Retrieved 12th January, 2016, from http://www.moe.gov.lk

Ministry of Human Resource Development. *Education for All- Nation Action Paln SriLanka*. Retrieved 12th December. 2015 from http://www.moe.gov.lk

சந்தானம், எஸ்.,கணபதி, வி.(2003).கல்வி மனவியலும் குழந்தை கல்வியும்.சென்னை: சாந்தா பப்ளிஸ்.(ப.122)

சந்தானம்,எஸ்.,(1983).கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயம். (1997).பாடசாலை புடைக்காட்சி 1913-1997.

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி. (2004), பொன்விழா இதழ்.